## IPMA Award for Environment

Paper mills are gradually reducing their environmental impact through vast tracts of agro forestry leading to carbon sequestration and many other measures such as a reduction in water usage, recycling of discharge and employing effective effluent treatment techniques. IPMA Award for Environment is being conducted once in two years which recognizes and rewards the efforts of an Indian paper mill towards the vast spectrum of environment protection.

IPMA awards are truly representative of the entire industry as these are open to all the paper mills in India regardless of size, category, location and affiliation.




TNPL unit I has been selected as winner of the Environment award for the year 2019-20. Due to pandemic, the award function was conducted during current year only on 13th January 2023 at New Delhi.

Dr. Seenivasan, CGM (Plantation, R&D and Sustainability Officer) and K. Ravi DGM (Environment) participated in the function and received the award from Mr. Harsh Pati Singhania, Vice Chairman & Managing Director, JK Paper Limited, and Mr. A. S. Mehta, President, IPMA.

# IPMA சுற்றுச்சூழல் விருது

காகித நிறுவனங்கள் தண்ணீர் பயன்பாட்டை குறைத்தல், பயனுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நுட்பத்தை பயன்படுத்துதல், மறுசுழற்சியை அதிகரிப்பதன் மூலம் கழிவுநீர் வெளியேற்றத்தைக் குறைத்தல், பரந்த நிலப்பரப்புகளில் வேளாண்மை காடுகளை நிறுவி, பராமரிப்பு செய்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு தனது இயக்கத்தினால் ஏற்படக்கூடிய சுற்றுச்சூழல் தாக்கத்தை படிப்படியாக குறைத்து வருகின்றன. இவ்வாறு சுற்றுச்சூழல் பாதுகாப்பில் முனைப்பாக செயலாற்றும் காகித நிறுவனங்களை அங்கீகரிக்கும் வகையில் இந்திய காகித உற்பத்தியாளர் சங்கம் (IPMA) இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை சுற்றுச்சூழலுக்கான IPMA விருதினை வழங்கி வருகிறது.

இந்த IPMA விருதானது, இந்தியாவில் உள்ள அனைத்து வகையான காகித ஆலைகளும் பங்கு பெறும் வகையில் சீரிய முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.




நமது ஆலையினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றுச்சூழல் நடவடிக்கைகளுக்கான தகவல்களை கூராய்வு செய்து நமது ஆலையினை 2019–2020 ஆண்டிற்கான IPMA சுற்றுச்சூழல் விருதின் வெற்றியாளராக தேர்ந்தெடுத்தது. COVID – 19 பெருந்தொற்று காரணமாக விருது வழங்கும் விழா நடப்பாண்டு ஜனவரி மாதம் பதிமூன்றாம் தேதியன்று புதுதில்லியில் நடத்தப்பட்டது.

நமது ஆலையின் சார்பாக டாக்டர். சீனிவாசன், முதன்மை பொது மேலாளர் (வனத்தோட்டம், ஆராய்ச்சி & மேம்பாடு மற்றும் நிலைத்தன்மை அதிகாரி) மற்றும் திரு. கி. ரவி, துணை பொது மேலாளர் (சுற்றுச்சூழல்) ஆகியோர் விழாவில் பங்கேற்று J.K Papers Ltd., துணைத்தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் திரு. ஹர்ஷ் பதி சிங்கானியா மற்றும் IPMA வின் தலைவர் திரு. A.S மேத்தா அவர்களிடமிருந்து விருதினை பெற்றுக்கொண்டனர்.